**அ.வ.எண். 142/2018**

நாள். 25.07.2025

பெயர் சுரேந்திரன் த/பெ அண்ணாமலைகவுண்டர்

வாதி தரப்பு 1-ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) பிரதிவாதி சாமிகண்ணு மீது எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் நிலத்தை அபகரித்த காரணத்தினால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.8/1, 7/4, 103/1 ஆகும். என் நிலமும் பிரதிவாதியின் நிலமும் பக்கத்து நிலம் என்றால் சரிதான். என் நிலத்திற்கு எந்த திசையில் சாமிகண்ணு நிலம் உள்ளது என்றால் சுத்தி என் நிலம் உள்ளது அதற்கு மேற்க மற்றும் கிழக்கில் சாமிகண்ணு நிலம் உள்ளது.

2) என் நிலம் எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தா வழி வந்த நிலம் ஆகும். என் குடும்பத்திற்கு பாகம் செய்து கொண்ட தேதி எனக்கு தெரியுமா என்றால் 1972ஆம் ஆண்டில் இருந்து பிரித்துக்கொண்டோம். வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டோமா அல்லது பத்திரம் மூலம் பிரித்துக்கொண்டோமா என்றால் பத்திரம் மூலம் பாகம் பிரித்துக்கொண்டோம். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் மூலம் எனக்கு எந்தெந்த சர்வே என் ஒதுக்கப்பட்டது என்றால் சர்வே எண்.9, 104, 8/1, 7/4, 103/1 ஆகும்.

3) வழக்குரையில் பிரதிவாதி சாமிகண்ணு என்னை என் நிலத்தை அபகரிக்ககிறார் என்று சொல்லியுள்ளேன் சுமார் 20 நாட்கள் முன்பு வந்து சாமிகண்ணு ஆள் வைத்து கேட்டார். நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி என்னிடம் கேட்டாரா என்றால் கேட்கவில்லை. மேற்படி பிரச்சனை சம்பந்தமாக ஊர்பஞ்சாயத்தார் மூலம் பேசினார்களா என்றால் சரிதான், ஆனால் பிரதிவாதி அதற்கு கட்டுப்படவில்லை. பிரதிவாதி சாமிகண்ணு என் நிலத்தை ஓட்டியுள்ளதாக முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அது எவ்வளவு பரப்பளவு இருக்கும் என்றால் சுமார் 30 சென்ட் இருக்கும்.

4) பிரதிவாதி சாமிகண்ணு எத்தனை ஆண்டு காலம் என் நிலத்தை ஓட்டியுள்ளார் என்றால் சுமார் 5 அல்லது 6 வருடம் இருக்கும். ஊர்பஞ்சாயத்தில் பிரதிவாதி என்ன சொன்னார் என்றால் சாமிகண்ணு நிலத்தை அளக்க முடியாது என்று சொன்னார். எந்த தேதியில் நான் ஊர்பஞ்சாயத்தாரிடம் பேசினேன் என்றால் 2015ம் ஆண்டில் பேசினேன். நான் 2015ம் ஆண்டு ஊர்பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசவில்லை என்றும், 14.10.2018 ஆம் ஆண்டு தான் பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசினேன் என்றும், இந்த வழக்கிற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் பிரதிவாதி சர்வேயரை அளப்பதற்கு சம்மதம் தெரிவித்தாரா என்றால் இல்லை. அதன்பின்னிட்டு நான் சர்வேயரை வைத்து நிலத்தை அளந்தேனா என்றால் அளந்தேன். அப்போது பிரதிவாதி சாமிகண்ணு நிலத்தை அளப்பதற்கு அனுமதித்தாரா என்றால் அனுமதித்தார்.

5) அப்போது சாமிகண்ணு நிலத்தை அளக்க அனுமதித்தார் என்று சொல்கிறேன், ஆனால் நான் தாக்கல் செய்த வழக்கில் அனுமதிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சாமிகண்ணு என் நிலத்தை ஓட்டவும்இல்லை என்றாலும், அவர் என் நிலத்தை விலைக்கு கேட்கவுமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி சாமிகண்ணுவை பழிவாங்கவேண்டி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் தாவா நிலத்தை அளந்து அவர் அவர்களிடம் அவர் அவர்கள் வசம் உள்ளது என்று சொன்னார்கள் அதன்படி தான் நானும், பிரதிவாதியும் நிலத்தை ஓட்டி வருகிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

SRI MATHURA S

Digitally signed by SRI MATHURA S
Date: 2025.07.25 11:53:26 +0530